விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 101 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 16 வியாழக்கிழமை (30.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

கடற்படையினரின் சோதனை சாவடி மூலமே

## வடமராட்சியில் படகுகள் தொழிலுக்கு செல்ல வேண்டும்

அமைச்சர் டக்ளஸ் தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்



11

## எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

அமைச்சர் கஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இன்று முதல் அமுலாகும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர 11

## பேருந்து கட்டணம் 12.09 வீதத்தால் குறைப்பு



(கொழும்பு)

இன்று முதல் பேருந்து கட்டணம் 12.09 சதவீதத்தால் குறைக்கப்படும் என பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற் 11

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உடைப்பு

# வவுனியாவில் இன்று கண்டனப் பேரணி

(வவுனியா)

- போராட்டத்தில் அனைவரையும் ஒன்றிணையும் கோரிக்கை.
- போராட்டம் தொடர்பாக போலிப் பரப்புரை இடம்பெறுவதாக ஆலய நிர்வாகம் தெரிவிப்பு.

வவுனியா வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் உடைத்தழிக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக ஆலயத்தின் நிர்வாகத்தினரால் வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தினை திசை திருப்பும் நோக்குடன் சமூக வலைத்தளங்களில் பொய்யான பரப்புரைகளை சில விசமிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக ஆலயத்தில் சிதைக்கப்பட்ட 11

## ஆர்ப்பாட்டத்துக்கான பேருந்து ஏற்பாடுகள்

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்பிற்கு எதிரான போராட்டத்திற்கான பேருந்து ஒழுங்குகள்,

யாழ்ப்பாணம் - ரவி - 0776782336, முல்லைத்தீவு - விஜயகுமார் - 0770395009, திருமுருகண்டி - பிறேம் - 0779361294, மல்லாவி - பிரசாத் - 0778049930, ஒலுமடு - நெடுங்கேணி - மதியாமடு - புளியங்குளம் - தமிழ் - 11

## மின்சாரக் கார்களை மட்டும் இறக்குமதி செய்ய தீர்மானம்

அமைச்சர் மனுஷ நாணயக்கார

(கொழும்பு)

எதிர் வரும் காலத்தில் அனுமதி கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் மின்சார கார்களை மட்டுமே இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இனி, இந்த நாட்டில் அரசாங்கம் 11

முச்சக்கரவண்டி
**கட்டணம் குறைப்பு**
5 பக்கம் பார்க்க

**150 கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு**
6 பக்கம் பார்க்க

இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள

## கண்ணகை அம்மன் ஆலயத்தில் இரு விக்கிரகங்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணம் பலாலி கண்ணகை அம்மன் கோவிலில் இருந்து பிள்ளையார் மற்றும் முருகன் சிலைகள் களவாடப்பட்டுள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டில் குறித்த கோவில் உள்ள நிலையில், விக்கிரகங்கள் களவு போயுள்ளன.

இராணுவத்தின் அனுமதியை எடுத்த பின்னரே ஆலயத்திற்கு 11

## அதிர்ச்சியூட்டும் வகையில் இலங்கையில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஜனவரி மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கு இடையில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாக 67,900 பேர் கைது செய்யப்பட்டதாகவும் இலங்கையில் போதைப்பொருள் பயன்பாடு அதிர்ச்சியூட்டும் வகையில் அதிகரிக்கிறது என்றும் தேசிய ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபை (NDDCB) தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் 52% பேர் ஹெரோயின் வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டுள்ளனர், அவர்களில் 37% பேர் கஞ்சா தொடர்பான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர் என்று NDDCB இன் இயக்குநர் ஜெனரல் பத்ராணி சேனாநாயக்க தெரி 11

## கோவில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக

நாளை அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் சைவக் கோவில்கள் மற்றும் சைவமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை இடம்பெறவுள்ளது.

வடக்குக்கிழக்கிலுள்ள சைவ சமயம் சார்ந்த அமைப்புக்கள், கோவில் தர்மகர்த்தா சபையினர், ஆதீன கர்த்தாக்கள், கோவில் நிர்வாகத்தினைச் சேர்ந்தவர்களை இக் கலந்துரையாடலில் 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

## வேலுப்பிள்ளை செல்வரத்தினம் (இரத்தினம்)



(உப்பு வல்லை ஸ்ரீமங்கள விநாயகர் ஆலயம், சிறிதேவி இல்லம், சிறிதேவி பழக்கடை, சிறிதேவி சைவ உணவகம் ஆகியவற்றின் உரிமையாளர்)

| பிள்ளையாய் மடியில் | மங்கள விநாயகர் பாதத்தில் |
|---|---|
| 08.08.1942 | 28.02.2023 |

கடந்த 28.02.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர், அமரர் வேலுப்பிள்ளை செல்வரத்தினம் அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.03.2023) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தங்களை கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு வருகை தருமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் எம்முடன் பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இன்று வரை எமக்கு பல உதவிகளையும் செய்து தந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வைத்தியசாலை வீதி,
மந்திகை, புலோலி.

(C-6252)

இங்ஙனம்:
குடும்பத்தினர்

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

## 17.04.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப் பகுதிக்கு கோழி இறைச்சிக் கடைகள் கருவாட்டுக்கடை மற்றும் பழைய முள்ளிப்பற்று உப அலுவலகம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக் கேள்வி அறிவித்தல் - 2023

ஏலக்கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 30.03.2023 - 12.04.2023 வரை
ஏலக்கேள்வி ஏற்கும் கடைசித் திகதி : 12.04.2023 காலை 10.00 மணிவரை
ஏலம் நடைபெறும் திகதி : 12.04.2023
ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி
ஏலம் நடைபெறும் இடம் : தலைமை அலுவலகம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

| இல. | கடை விபரம் | 2023ஆம் ஆண்டுக்கான ஆகக்குறைந்த ஏலத்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | |
| 01 | கோழியிறைச்சிக்கடை | 308,681.97 | 15,000.00 |
| 02 | கருவாட்டுக்கடை | 6,572.25 | 5,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | |
| 03 | கோழி இறைச்சிக்கடை | 35,433.00 | 5,000.00 |
| 04 | பழைய முள்ளிப்பற்று உப அலுவலகம் | 46,291.50 | 5,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினை 12.04.2023 ம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
03. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
04. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் ஏலத்தொகையின் 1/3 பகுதி பாதுகாப்பு வைப்பு பணத்தினைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு வைப்பு பணத்தை உடனடியாகச் செலுத்தத்தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.
05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகையினை மாதாந்தம் 05ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
07. ஏலக் கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
08. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

(C-6253)

30.03.2023

# சுற்றுமதில் கையளிப்பும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கல்வி வளர்ச்சிக் கழகத்தால் மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட சுற்று மதில் கையளிப்பு நிகழ்வும் மாணவர் கௌரவிப்பும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மண்டைதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் செ.சேதுராஜா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி செயலகத்தின் வட மாகாண அபிவிருத்தி பிரிவின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் அவர்களும் சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்டஸ் அவர்களும் கௌரவ விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரம் அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் அதிதிகளாக மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் கே.எஸ் இளங்கோ, உதயம் (இந்தியா) நிறுவனப் பணிப்பாளர் இ.பரதன், ஷிப்பியார்ட் ரு நீட்டைல் மன்செஸ்ரர், யூ.கே ஹய்சர் ரவீந்திரநாத் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந் நிகழ்வில் வரவேற்புரையினை கல்வி வளர்ச்சிக் கழகத்தின் முன்னாள் தலைவர் சி.ஞானசேகரம் அவர்களும் நன்றியுரையை மு.இராஜகோபால் அவர்களும் நிகழ்த்துவர். (ம-7,9)

# வடக்கு கிழக்கில் பௌத்தத்தை பாதுகாக்க கொழும்பில் விசேட கூட்டம்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில், கொழும்பில் நேற்று விசேட கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

சாசனத்தைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய சிங்கள கூட்டமைப்பின் ஏற்பாட்டில், நடைபெற்ற இந்த கூட்டத்தில், வடக்கு, கிழக்கில், பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், வடக்கு, கிழக்கு பௌத்த அமைப்புகள், பௌத்த பிக்குகள், பௌத்த அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ம-7,9)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

## இயக்கச்சி சந்தை வளாகக் கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2023

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 30.03.2023 தொடக்கம் 12.04.2023 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 12.04.2023 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 12.04.2023 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**இயக்கச்சி கடைக்கான கேள்வி அட்டவணை**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்படகூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | VS-04 | 192,000.00 | 19,200.00 | 2,000.00 |
| 2. | PS-09 | 252,000.00 | 25,200.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்.)
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 12.04.2023ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
06. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
07. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
08. VS-04 கடையானது உள்ளூர் உற்பத்திகள் மற்றும் மரக்கறி வியாபாரத்திற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.
09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்விப் பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

த.தர்சினி, செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(C-6254)

30.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வெடியரசன் கோட்டை தமிழ் மக்களின் சொத்து’

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டது.**





பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட அக்கட்சியின் உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தையடுத்து அப்பகுதியில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை பௌத்த விகாரையுடன் தொடர்புபடுத்தி கடற்படை அமைத்த பதாகையையடுத்து குழப்பம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் தொல்லியல் திணைக்களம், கடற்படை ஆகியவற்றினரின் செயற்பாட்டை கண்டித்தும் வெடியரசன் கோட்டை தமிழரின் சொத்து என வலியுறுத்தியும் குறித்த போராட்டம் இடம்பெற்றது.(4-6-33-104)

# எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் போதுமான எரிபொருள் இருப்பு உள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக எரிபொருள் விநியோகம் தடைப்பட்டிருந்த போதிலும் தற்போது அது வழமைக்குத் திரும்பியுள்ளது என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் அநாவசியமாக வரிசையில் நிற்க வேண்டாம் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (நி)

# அரசியல் பொறுப்பை ஏற்க தயார் நாமல் பகிரங்க அறிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு அரசியல் பொறுப்பையும் ஏற்க தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் யார் என்பதை தீர்மானித்த பின்னரே தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு கட்சி முன்வைக்கும் எந்தப் பொறுப்பையும் ஏற்கத் தயார் என நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் கட்சியின் மறுசீரமைப்புக்காக பாடுபடுவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மின்பாவனை 20 வீதத்தால் குறைவடைந்துள்ளது

(கொழும்பு)

மின்சாரப் பாவனை சுமார் 20 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டண உயர்வை அடுத்தே மின்சாரப் பாவனை சுமார் 20 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இடையூறு விளைவித்த தொழிற்சங்க தலைவர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்குவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்திற்கு இடையூறு விளைவித்த தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகம் மற்றும் பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் ஆகியவற்றினுள் பிரவேசிப்பதற்கும் குறித்த தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்து அதிகாரிகளும் கடமைக்கு சமுகமளித்து, எரிபொருள் விநியோகம் மற்றும் ஏனைய கடமைகளை முன்னெடுக்குமாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அமைச்சுப் பதவி வழங்காவிட்டால் எதிர்க்கட்சியின் பக்கம் தாவுவோம்

## பெரமுனவின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெகுவிரைவில் எங்களுக்கு அமைச்சு பதவி தரவில்லையெனில், சுயாதீனமாக செயற்படுவோம் அல்லது எதிர்க்கட்சியின் பக்கம் செல்வோம் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.

அமைச்சு பதவிகளை வழங்குவதில் ஜனாதிபதி இழுத்தடிப்பு செய்வதால் தாம் இவ்வாறு செயற்படப் போவதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கு தெரிவித்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தின் பின்னரும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பின் பின்னரும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுமா என்பது நிச்சயம் இல்லாமல் உள்ளது.

ஆகவே, நாங்கள் எதிர்க்கட்சி பக்கம் செல்வோம் அல்லது சுயாதீனமாக செயற்படுவோம் என பசில் ராஜபக்ஷவிடம் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கும் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அந்த சந்திப்பில் ஜோன்சன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன போன்றவர்களுக்கு அமைச்சுப் பதவி கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என பசிலிடம் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (நி)

# ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான அறிவுறுத்தலை வெளியிட்டார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கையின் பொதுச் சேவைகள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அந்த பதவியிலிருந்து நீக்குவதற்கான அறிவுறுத்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

ஜனக ரத்நாயக்கவை பதவியிலிருந்து நீக்குவதற்கான ஏழு நாள் அறிவுறுத்தலை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டின் பொதுச் சேவைகள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் சட்டத்தின் படி ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஜனக ரத்நாயக்க ஆணைக்குழுவின் விதிமுறைகளிற்கு மாறாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்ததுடன் சட்டத்தின் அடிப்படையில் தவறான நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றவாளி.

அத்துடன் சட்டத்தை மீறும் வகையில் சட்டத்தின் உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் இலங்கை மின்சார சபையின் கட்டண அதிகரிப்பினை எதிர்த்தார் என்பதும் ஒரு குற்றச்சாட்டாக காணப்படுகின்றது.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராக உறுப்பினராக பதவி வகிக்கும் நிலையில் இந்தத் துறையுடன் தொடர்புபட்ட அமைச்சரவை இலக்கு வைத்து அறிக்கைகளை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (நி)

# சிறுவர் இல்லம் மீது தாக்குதல்; கண்டன போராட்டம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவச் சிறுவர் இல்லம் கடந்த திங்கட்கிழமை மாலை அடித்து நொறுக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறுவர் இல்லத்திற்கு முன்னால் நேற்று பழைய மாணவர்கள் மற்றும் திருநெல்வேலி ஊர் மக்களினால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சைவ சிறுவர் இல்லத்திற்கு பொருத்தப்பாடான மாணவர்களை மட்டும் அனுமதியுங்கள், சீர்திருத்தப்பட வேண்டிய சிறுவர்களை சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்புங்கள், சைவசிறுவர் இல்லத்திற்கு தகுதியற்ற பணியாளர்களை நீக்கி பொருத்தப்பாடானவர்களை நியமியுங்கள், சைவ சிறுவர் இல்லத்தின் பாரம்பரியத்தையும் அதனால் எமது கலைசார் பண்பாடுகளையும் அழிவடைவதற்கு நாம் ஒரு



போதும் இடமளியோம், மாணவர்களை தவறாக வழிநடத்தி அவர்களை வன்முறைக்கு தூண்டியவர்களுக்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம், தனிநபர் பிரச்சினைகளுக்காக மாணவர்களை பகடைக்காய் ஆக்காதீர்கள் போன்ற கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவிற்கு பதிலடி கொடுத்தது மே.தீவுகள்



தென்னாபிரிக்க அணிக் கெதிரான மூன்றாவது இருபது- 20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 7 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.


இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் நிக்கலஸ் பூரான் 41 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து 221 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களை பெற்று 7 ஓட்டங்களினால் தோல்வியடைந்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட இருபது-20 தொடரை மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டுக்கு ஒன்று என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. (4)

# ஆர்ஜென்டினா அணிக்காக 100 கோல் அடித்து மெஸ்ஸி சாதனை



கட்டாரில் கடந்த ஆண்டு நடந்த உலக கிண்ண கால்பந்து போட்டியில் லியோனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்டினா அணி சம்பியன் பட்டம் பெற்றது. அந்த அணி இறுதிப் போட்டியில் பிரான்ஸை வீழ்த்தியது.

இதன் மூலம் மெஸ்ஸிதான் உலகின் சிறந்த கால்பந்து வீரர் என்பதை நிரூபித்தார். உலக சம்பியனான ஆர்ஜென்டினா-குராக்கோ அணிகள் மோதிய நட்பு ரீதியிலான சர்வதேச கால்பந்து போட்டி நேற்று அதிகாலை நடந்தது.

இதில் ஆர்ஜென்டினா 7-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. ஆர்ஜென்டினா கப்டனும் நட்சத்திர வீரருமான லியோனல் மெஸ்ஸி 3 கோல்கள் அடித்து ஹாட்ரிக் சாதனை புரிந்தார். அவர் 20, 33 மற்றும் 37 ஆவது நிமிடங்களில் கோல் அடித்தார்.

நிக்கோலஸ் கோனல்ஸ், என்சோ பெர்னாண்டஸ், டிமரியா கோன்சாலோ மாண்டியல் ஆகியோர் தலா 1 கோல் அடித்தனர்.

மெஸ்ஸி முதல் கோலை அடித்த போது சர்வதேச போட்டியில் 100 கோல்களை தொட்டார். அவர் ஆர்ஜென்டினா அணிக்காக 174 போட்டியில் விளையாடி 102 கோல்கள் அடித்துள்ளார்.

சர்வதேசப் போட்டியில் 100 கோல்களை அடித்த 3 ஆவது வீரர் என்ற பெருமையை மெஸ்ஸி பெற்றார். போர்த்துக்கல் நாட்டை சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ 198 போட்டியில் விளையாடி 122 கோல்கள் அடித்து முதல் இடத்தில் உள்ளார்.

ஈரான் நாட்டை சேர்ந்த வரான அலிடாய் 148 ஆட்டத்தில் 109 கோல்கள் அடித்து 2 ஆவது இடத்தில் இருக்கிறார். (4)




**அனோஜா**




**நிசாத்**




**சுயஷ்**




**வனேதன்**




**கனகாங்கி**

பிரச்சினை என்பது தொலைநோக்கி போலவே நீ பார்க்கும் பார்வையில் தான் எல்லாம் அடங்கி இருக்கிறது. அதைப் பெரிதாக நினைத்தால் பெரிதாகத்தான் தோன்றும் சிறியதாக நினைத்தால் பிரச்சினை உனக்கு ஒரு பொருட்டாகவே தெரியாது.

**துஷானி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெடுக்குநாறி மலையில்

# எதிர்வரும் ஞாயிறன்று சிவலிங்கம் பிரதிஷ்டை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(கொழும்பு)

**வவுனியா, நெடுங்கேணி - வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் சிலை உடைத்து வீசப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி முழுமையானதொரு அறிக்கையை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.**



அத்துடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தான், வவுனியா, வெடுக்குநாறி மலைக்கு செல்லவுள்ளதாகவும் இதன் போது சேதமாக்கப்பட்ட சிலை மீள் பிரதிஷ்டை செய்யப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

வவுனியா, நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் சிலை உடைத்து வீசப்பட்ட அதேபோல விக்கிரகங்களும் மாயமாகியுள்ள சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இலங்கை முன்னேறுவதற்கு இன், மத நல்லிணக்கம் என்பது மிக முக்கியம். அதனை ஏற்படுத்துவதற்கு எமது அரசு தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அதனை சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் சம்பவங்களை அனுமதிக்க முடியாது.

அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றும் ஜீவன் குறிப்பிட்டார். (4)

# முச்சக்கரவண்டிக் கட்டணமும் குறைப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை சீர்திருத்தத்தை அடுத்து அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் முச்சக்கர வண்டிக் கட்டணத்தைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

முதல் மற்றும் இரண்டாவது கிலோமீற்றர்களுக்கு கட்டணத்தைக் குறைக்க அறிவித்துள்ளதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

அதன்படி, முதலாவது கிலோமீற்றருக்கு ரூ. 100 மற்றும் இரண்டாவது கிலோமீற்றருக்கு ரூ.80 என கட்டணம் அறவிட படும்.

அதேவேளை, தமது வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை 15 லீற்றர்களாக உயர்த்தாதது குறித்து மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் மீதான அதிருப்தியையும் சங்கத்தினர் வெளிப்படுத்தினர்.

பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்தும் அமைச்சர் மறுமொழி எதுவும் தரவில்லை எனத் தெரிவித்தனர்.

இதற்கு முன்னதாக முச்சக்கர வண்டி கட்டணமானது முதலாவது கிலோமீற்றருக்கு ரூ. 120 ஆகவும் இரண்டாவது கிலோமீற்றருக்கு ரூ. 100 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. (நி)

# அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டிற்கு ஆய்வுக்கட்டுரைகள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை, கடந்த 2020 ஆண்டு முதல் வருடந்தோறும் கந்தையா 'கார்த்திகேசன் அறக்கொடை' நிதியத்தின் அனுசரணையில் அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டினை நடத்தி வருகின்றது. அதனுடைய நீட்சியாக நடப்பாண்டில் நான்காவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டினை "சமூகக் கட்டுமானத்தில் சங்கமருவிய கால இலக்கியங்கள்" என்ற கருப்பொருளில் நடத்தப்படவுள்ளது.

அற இலக்கியமும் சமயமும், காவியமும் அறமும், அற இலக்கியமும் பெண்களும், அறமும் அற இலக்கியமும், சமூகமும் அறமும், அற இலக்கியமும் ஒழுக்கவியலும், அற இலக்கியமும் அழகியலும், அற இலக்கியமும் சூழலியலும், கோட்பாட்டியல் நோக்கில் அற இலக்கியங்கள், சமகால சூழமையில் அற இலக்கியங்கள், அற இலக்கியங்களும் மொழிப் பயன்பாடும், இலக்கியங்களும் படிவங்களும், அறமும் அரசியலும், அறமும் அதிகாரமும்,அறமும் பண்பாடும், அற இலக்கியமும் சமூக மருத்துவமும் ஆகியன ஆய்வுத்தடங்கள் ஆகும்.

ஆய்வுக் கட்டுரை சொந்த முயற்சியாக இருப்பதுடன் இதற்கு முன்னர் வேறெங்கும் பிரசுரிக்கப்படாததாகவும் இருத்தல் வேண்டும்

தமிழ் மொழி மூலம் கணினி அச்சில் பாமினி எழுத்துருவில் அமைய வேண்டும்.

100 சொற்களுக்கு மேற்படாத ஆய்வுச்சுருக்கம், திறவுச் சொற்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக முழுமையான ஆய்வுக் கட்டுரை அமைய வேண்டும்.

அடிக்குறிப்பு, உசாத்துணை ஹாவாட் முறையில் அமைதல் வேண்டும். ஆய்வுக் கட்டுரைகளை ict2023tamil @gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அல்லது பேராசிரியர் கி.விசாகரூபன், தலைவர், தமிழ்த்துறை, கலைப்பீடம், யாழ்ப்பரணப் பல்கலைக்கழகம், இலங்கை எனும் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

ஆய்வாளர் ஆய்வுத் தலைப்பு மற்றும் ஆய்வுச் சுருக்கத்தினை ict2023 tamil@ gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். தலைப்பு தொடர்பிலான ஒப்புதல் கிடைத்த பின்னர் முழுமையான கட்டுரையினை மே 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும் என யாழ். பல்கலை தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் அறிவித்துள்ளார்.(4-6)

# இந்திய முட்டைகளுக்கு சுகாதார திணைக்களம் அனுமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட முட்டைகளுக்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அனுமதிவழங்கியுள்ளது.

இது தொடர்பான அறிக்கை வர்த்தக அமைச்சிக்கு அனுப்பப்படவுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

30.03.2023
பங்குனி 16, வியாழக்கிழமை
நவமி பின்னிரவு 1.30 மணிவரை
புனர் பூசம் பின்னிரவு- 12.47 மணிவரை

சுபநேரம் -7.43-9.13 மணிவரை
இராகுகாலம்-1.43-3.13 மணிவரை
ஸ்ரீராம நவமி

சந்திராஷ்டமம் - கேட்டை, மூலம்

வளவன்




உறவினர் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




சுபகாரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணங்களால் நன்மையுண்டு, உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.




கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.




ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.




காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் தன்னம்பிக்கையே நிகரில்லா செல்வம்.

# எழுவைதீவின் பனை வளத்தை பாதுகாக்க நடவடிக்கை-சிறீதரன் எம்.பி



(தருமபுரம்)

எழுவைதீவின் பெருவளமாக உள்ள பனைவளம் அழிக்கப்படுவதை தடுப்பதற்கும் கருவேலை மரங்களின் பரவலை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுவைதீவு மக்களிடம் தெரிவித்துள்ளார். எழுவைதீவு மக்களும் கடற்றொழிலாளர்களும் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம்எழுவைதீவில் நடைபெற்றது.

இதன்போது. எழுவைதீவின் பெருவளமாக உள்ள பனைவளம் அழிக்கப்பட்டு வருவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் அதிவேகமாக பரவிவரும் கருவேலை மரங்களின் பரவலைக் கட்டுப்புடுத்த வேண்டும் என்றும் தொடர்ச்சியாக தாம் எதிர்கொள்ளும் குடிநீர். போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினைகள் பற்றியும் மீன்களை பதனிடுதலில் உள்ள இடர்பாடுகள் உட்பட மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகள் குறித்தும் அப்பகுதி மக்களும் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளும் பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-316-33-104)

# தமிழர்களின் இடங்களை அபகரிப்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலே

## விநோ எம்.பி தெரிவிப்பு

(நெளுக்குளம்)

தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலே என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார். வவுனியாவிலுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அதனோடு இணைந்த பிரதான சூலாயுதம் அதனோடு ஏனைய விக்கிரகங்கள் பிடுங்கப்பட்டு எறியப்பட்ட விடயத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் வன்மையான கண்டனத்தை தெரிவித்து கொள்கிறோம்.

தொடர்ச்சியாக இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. அரசாங்கத்திற்கு எதிராக கண்டன குரல்களை நாங்கள் மட்டுமல்ல சர்வதேசமும் இவ்விடயத்தில் தலையிட்டாலும் அரசாங்கம் இதனைப் பற்றி செவி சாய்ப்பதாகவே இல்லை.

வெடுக்குநாறி மலையில் உள்ள சைவ அடையாளங்கள் திட்டமிட்ட வகையிலே இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது. மிலேச்சத்தனமான மிகவும் கொடுங்கோல் ஆட்சியினுடைய வெளிப்பாடாகத் தான் இருக்கிறது. இதனை இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்கள் யார். தொல்பொருள் திணைக்களமாக இருக்கலாம் அவர்களை பாதுகாக்கின்ற பாதுகாப்பு படையாக இருக்கலாம் முழுமையான விசாரணை நடைபெற்று இதன் மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

நாளை (இன்று) 30 ஆம் திகதி கண் டன பேரணிக்கு வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினால் ஆதரவு வழங்க இருக்கின்றோம்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த மக்கள் அனைவரும் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன் என தெரிவித்தார். (4-6-299)

# தரம் 1 மாணவர்களுக்கான பேசும் ஆங்கில மொழி நிகழ்ச்சித் திட்டம் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தரம் 1 மாணவர்களுக்கான பேசும் ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டம் இன்று 30 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக வடமாகாண கல் விப் பணிப்பாளர் ஜோண் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

முதலாம் தரம் மற்றும் இரண்டாம் தர மாணவர்களின் ஆங்கில மொழியை விருத்தி செய்யும் நோக்குடன் அதன் செயற்பாட்டின் ஒரு அங்கமாக வாய் மொழி மூலம் ஆங்கிலத்தைப் பேசும் நிகழ்ச்சித் திட்டத்தினை சகல பாடசாலைகளின் தரம் 1இல் 30 ஆம் திகதி முதலாம் பாட வேளையில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஆசிரியர்களுக்கு திட்டமிடலுடன் கூடிய வகுப்பறைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக காலை 8 மணிக்கு தரம் 1 வகுப்புள்ள அனைத்துப் பாடசாலை களிலும் செயற்பாடு ஆரம்பமாகின்றது.

அதற்கான வாய் மொழி மூலம் பேசும் பயிற்சி நெறி கணித பாடத்தை அடிப்படையாகக் கொண்டு பேசும் ஆங்கிலமாக ஆரம்பிக்கப்பட வுள்ளது.

வடமாகாண ரீதியாக யா/ ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரம் கலந்து கொள்ள வுள்ளார். (4-6-90)

# யாழில் நூதனமான முறையில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(கரணவாய்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவு மற்றும் பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இடைப் பகுதியில் நூதனமான முறையில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவதாகவும் கட்டுப்படுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அச்சுவேலி சந்தியிலிருந்து சங்கானைக்குச் செல்லும் வீதியிலேயே நூதன்மான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது. மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தை கழற்றி வீதியில் வைத்துவிட்டும் மயங்கி விழுந்து கிடப்பதும் என பாசாங்கு செய்து விட்டு மோட்டார் சைக்கிளில் வருபவர்களிடம் தமது கைவரிசையைக் காட்டுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஒரு மோட்டார் சைக்கிளில் தெளிவற்ற இலக்கத் தகடுடன் மூன்று பேர் தொடர்ச்சியாக சுற்றித் திரிவதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-60)

# கைவிடப்பட்ட கால்நடைகளை பராமரிக்க இடங்கள் தெரிவு

## விரும்பியோர் விண்ணப்பிக்கலாம்

(அராலி)


வடக்கு மாகாணத்தில் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகளைப் பராமரிப்பதற்கான காணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கால்நடைகளை பராமரிக்க விரும்புவோர் ஆளுநர் செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில், உரிமையாளர்களால் கைவிடப்பட்ட கால்நடைகளை பராமரிப்பதற்கு ஏற்ற இடங்களை தெரிவு செய்யுமாறு கேட்டதற்கு இணங்க 22 பிரதேச செயலகங்களில் அதற்கான இடங்களை தெரிவு செய்து அனுப்பி உள்ளார்கள்.

யுத்த நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலம் முதல் இன்று வரை கால் நடைகள் குறிப்பாக மாடுகள். பெருமளவில் உரிமையாளர்களால் கைவிடப்பட்டு கட்டாக் காலிகளாக பொது இடங்களில் அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஆகவே மேற்படி கால்நடைகளுக்கான பாதுகாப்புக் காப்பகங்களை விரும்பிய பகுதிகளில் அமைத்துப் பராமரிக்க விரும்பும் சமய ஸ்தாபனங்கள், தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மிருக வதைக்கு எதிரான இயக்கங்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது விருப்பத்தினைக் கடிதம் மூலம் தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

# கைதடி மேற்கு பகுதியில் வீடொன்று தீக்கிரை



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கைதடி மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் முழுமையாக தீக்கிரையாகியுள்ளது.

வீட்டில் வசித்த வயோதிப தம்பதியினர் தோட்டத்திற்கு சென்றிருந்த வேளையில் வீடு தீக்கிரையாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மின் ஒழுக்கு காரணமாக வீடு தீக்கிரையாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதன்போது வீட்டில் வைக்கப்பட்டிருந்த பணம், நீர் இறைக்கும் இயந்திரம், தளபாடங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் அனைத்துமே தீயில் எரிந்து கருகியுள்ளன.

இது குறித்து சாவகச்சேரி பொலிஸார், கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# மாதகல் கடற்கரையில் 150 கிலோ கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் மாதகல் கடற்கரைப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 150 கிலோ கஞ்சாவும் சந்தேகத்திற்கு இடமான படகொன்றினையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

கடற்கரையை அண்டிய பற்றை காடொன்றினுள் சந்தேகத்திற்கு இடமான முறையில் படகொன்று மறைத்து வைக்கப்பட்டு இருப்பதாக கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், அங்கு விரைந்த கடற்படையினர் படகினை மீட்டனர்.

அதன் போது, அப்பகுதியை சோதனையிட்ட போது பொதி செய்யப்பட்ட நிலையில் 150 கிலோ கேரள கஞ்சாவையும் மீட்டனர். படகின் உரிமையாளர் தொடர்பிலும் கஞ்சா மீட்கப்பட்டமை தொடர்பிலும் கடற்படையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(4-6-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வகை சிலந்தி இனம் அவுஸ்திரேலியாவில் கண்டுபிடிப்பு



(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் குவீன்ஸ்லந்து மாநிலத்தில் புதிய வகை சிலந்தியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெரிய சிலந்தி வகையைச் சேர்ந்த குறித்த சிலந்தி, மிக அரிதாகவே காணப்படுவதாகவும் அதைப் பாதுகாப்பது மிக முக்கியம் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.


மேலும், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தச் சிலந்தி முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் போதிய தகவல்கள் இல்லாத காரணத்தால் அதை வகைப்படுத்த இயலவில்லை என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அது தொடர்பான ஆராய்ச்சி, 2017 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவுஸ்திரேலியாவின் குவீன்ஸ்லந்து மாநிலத்தில் இந்தப் புதிய வகை சிலந்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. (4)

# மரணம் எப்படி இருக்கும் அனுபவத்தை தரும் கண்டுபிடிப்பு

(கன்பரா)

மரணத்தை அனுபவிப்பது எப்படி இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. அவுஸ்திரேலியாவில் ஒரு புதிய விர்ச்சுவல் ரியாலிட்டி சிமுலேஷன் என்ற தொழில்நுட்பம் மூலம் மக்களுக்கு இதே போன்ற அனுபவங்களை வழங்க முயற்சி செய்யப்பட்டுள்ளது.



அத்தோடு மக்கள் இறக்கும் போது என்ன உணரலாம் என்பதை அனுபவித்து பார்க்க உதவுகிறது. ஷான் கிளாட்வெல் என்ற கலைஞர் பாஸிங் எலக்ட்ரிக்கல் ஸ்டோர்ம்ஸ் என்ற Vertual Reality அமைப்பை உருவாக்கியுள்ளார்.

இறப்பு நெருங்கும் போது எப்படி இருக்கும் என்ற உணர்வை இது கொடுக்கிறது. இதில் பங்கேற்பாளர்களுக்கு இதயத் துடிப்பு நிற்பது முதல் மூளை இறப்பு வரையிலான வாழ்க்கையின் உருவகப்படுத்தப்பட்ட வளர்ச்சியின் மூலம் அவர்களுக்கு ஒரு உணர்வை கொடுக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. மின்சாரப் புயல்களைக் கடந்து செல்லும் அனுபவம், உடலுக்குள்ளும் அதற்கு அப்பாலும் உள்ள பிரபஞ்சங்களைப் பற்றிய சிந்தனையைத் தருகிறது என கூறப்படுகிறது. (4)

# ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவு

(டோக்கியோ)

ஜப்பானில் 6.1 மெக்னிடியூட் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கு ஜப்பானில் உள்ள அமோரி மாகாணத்திலே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் அமோரியின் கிழக்கு கடற்கரையில் சுமார் 20 கிலோ மீற்றர் ஆழத்தில் பதிவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (4)

# செவ்வாய்க்கு நான்கு பேரை அனுப்ப தயாராகும் நாசா



(வோஷிங்டன்)

விண்வெளிக்கு முதலில் மனிதர்களை அனுப்பிய நாடு அமெரிக்கா தான். அந்த வகையில் தற்போது செவ்வாய்க் கிரகத்திற்கும் மனிதர்களை அனுப்பும் திட்டத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

செவ்வாய் கிரகத்திற்கு செல்லுபவர்கள் அங்கு சென்று என்ன செய்ய வேண்டும் என பயிற்சி அளிக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றனர் என செய்திகள் வெளிவந்துள்ளன. பூமியிலேயே செவ்வாய் கிரகத்தை போன்ற மாதிரியை உருவாக்கி எவ்வாறு நடக்க வேண்டும் மற்றும் உணவு சமைக்கும் முறை என்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அமெரிக்க விஞ்ஞானிகளால் இந்த செயற்பாட்டிற்காக 4 மனிதர்களைக் கொண்ட குழு ஒன்று தயார் செய்யப்பட்டு வருவதாக நாசா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பட்டின உப அலுவலகம், மானிப்பாய்

**வட்டாரம் : 10**
**வீதி :பொன்னாலை வீதி**
**ஆதன இல : 229/30 & 229/31**

வட்டாரம். 10 பொன்னாலை வீதி,ஆதன இலக்கங்கள் 229/30 மற்றும் 229/31 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாயிறை "அரசர் தோட்டம்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 05 குளி 5.66 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் கட்டுடை, மானிப்பாய் எனும் முகவரியில் வசிக்கும் நடராசா இராசேந்திரன் என்பவரால் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே என 8728 ஆம் இலக்க 10.03.2012 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இவ் ஆதனம் 9148 ஆம் இலக்க 06.11.2012 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 01 குளி 16.11 சதாசிவம் டிக்சன் என்பவருக்கும் 8790 ஆம் இலக்க 19.04.2012 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் நிலப்பரப்பு 03 குளி 7.55 சதாசிவத்திற்கும் பெண் சந்திராதேவிக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. சதாசிவமும் பெண் சந்திராதேவியும் 309 ஆம் இலக்க 18.01.2018 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் நிலப்பரப்பு 03 குளி 7.55 ஐ மகாலிங்கம் லோஜிதன் மனைவி ஜனனிக்கு வழங்கியுள்ளார்கள். நிலஅளவையாளர் A.அருள்நேசன் அவர்களால் வரையப்பட்ட 1262 ஆம் இலக்க 13.10.2011 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் துண்டு 01 மற்றும் துண்டு 03 "அரசர் தோட்டம்" நிலப்பரப்பு 05 குளி 5.66 கொண்ட இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் அவ் உரிமையினை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராயினும் எவ் உரிமையும் கோரப்படாதவிடத்து குறித்த 229/30 எனும் ஆதனமானது சதாசிவம் டிக்சன் என்பவருக்கும் 229/31 எனும் ஆதனமானது மகாலிங்கம் லோஜிதன் மனைவி ஜனனி என்பவருக்கும் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.




**செயலாளர்,வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.** (15077)


# 5 இலட்சம் கோழிகளை அழிக்கும் ஜப்பான்

(டோக்கியோ)

ஜப்பானின் பல்வேறு மாகாணங்களில் கடந்த ஆண்டு இறுதியில் இருந்து பறவைக் காய்ச்சல் பரவி வருகிறது. நாட்டில் உள்ள 47 மாகாணங்களில் 26 மாகாணங்களில் பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க 5 இலட்சத்து 58 ஆயிரம் கோழிகளை அழிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் ஜப்பானில் பறவைக் காய்ச்சல் காரணமாக 1 கோடியே 65 இலட்சத்துக்கும் அதிகமான கோழிகள் அழிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 140 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 250 | 260 | 250 | 300 |
| தக்காளி | 160 | 140 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 150 | 200 |
| கோவா | 60 | 100 | 100 | 160 |
| கரட் | 100 | 180 | 140 | 200 |
| பூசணி | 60 | 80 | 60 | 60 |
| புடோல் | 150 | 160 | 160 | 160 |
| வாழைக்காய் | 160 | 130 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 100 | 120 |
| பாகற்காய் | 400 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 250 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 90 | 120 |
| பயற்றங்காய் | 160 | 150 | 120 | 120 |
| லீக்ஸ் | 250 | 260 | 300 | 350 |
| பீற்றூட் | 130 | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 800 | 1200 |
| போஞ்சி | 200 | 220 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 160 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 70 | 80 |
| தேசிக்காய் | 350 | 250 | 250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 180 | 120 | — | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | — | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 140





கோட்டைக்குள்ளே உன் விருப்பப்படி சுற்றி அலையலாம்! இவ்விதம் கூறிவிட்டு இரண்டு புதிய ஆட்களைச் சின்னப் பழுவேட்டரையர் தம் அருகில் அழைத்து அவர்களிடம் ஏதோ சொன்னார். அவர் சொன்னது என்னவாயிருக்கும் என்று வந்தியத்தேவன் ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொண்டான்.

**முப்பத்து மூன்றாம் அத்தியாயம்**

**மரத்தில் ஒரு மங்கை!**

கோட்டைத் தளபதியின் இரு ஆட்களும் தன் இரண்டு பக்கத்தில் வர, வந்தியத்தேவன் தஞ்சைக் கோட்டையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான். தான் தப்பித்து ஓடிவிடாமல் பார்த்துக் கொள்ளவே அவர்கள் தன்னுடன் வருகிறார்கள் என்பதைப் பற்றி அவனுக்கு சந்தேகம் இருக்கவில்லை.

கோட்டை வாசல் வழியாக வெளியே யாரையும் போக விடாமல் பார்த்துக் கொள்ளும்படி கட்டளை பிறந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. ஆனாலும் அவன் அன்று முன்னிரவுக்குள் தப்பிச் சென்றே தீரவேண்டும். பெரிய பழுவேட்டரையர் வந்துவிட்டால், பிறகு தப்பித்துச் செல்வது இயலாத காரியம் உயிர் பிழைத்திருப்பதே முடியாத காரியமாகிவிடும்.

ஆகவே, தஞ்சாவூர் கோட்டைக்குள் வந்தியத்தேவன் அங்குமிங்கும் அலைந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது, அவனுடைய மனம் தப்பிச் செல்லும் வழிகளைப் பற்றி ஆலோசித்துக் கொண்டேயிருந்தது. முதலில் இந்த யமகிங்கரர்களிடமிருந்து தப்ப வேண்டும்; பின்னர், கோட்டையிலிருந்து தப்பிச் செல்ல வேண்டும். எப்படித் தப்புவது? அதுதான் தெரியவில்லை.

பார்க்கப்போனால் இவர்களிடமிருந்து தப்புவது பெரிய காரியமில்லை. இரண்டு பேரையும் ஒரு விநாடி நேரத்தில் தாக்கிக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிடலாம். ஆனால் எங்கே ஓடுவது? தஞ்சைக் கோட்டையைப் பழுவேட்டரையர்கள் எவ்வளவு பலப்படுத்திக் கட்டியிருக்கிறார்கள் என்பது நாடறிந்த செய்தி.

அவர்களுடைய அனுமதியின்றித் தஞ்சைக் கோட்டைக்குள் காற்றுக்கூட நுழைய முடியாது என்று ஜனங்கள் சொல்லுவார்கள். யமனும் வரமுடியாது என்று சக்கரவர்த்தியே இன்று காலையில் சொன்னார். அத்தகைய கோட்டையிலிருந்து எப்படிச் செல்வது? இந்த இருவரையும் தொட வேண்டியதுதான்; அவர்கள் உடனே கூச்சல் கிளப்பி விடுவார்கள்.

அடுத்த கணத்தில் தான் பாதாளச் சிறைக்குப் போக நேரிடும் அல்லது உயிரிழக்க நேரிடும். இவர்களைத் தாக்குவதில் பயனில்லை; தாக்காமல் தந்திரத்தினாலேயே தப்பிக்க வேண்டும். அப்படித் தப்பித்த பிறகு கோட்டையிலிருந்து வெளியேற வழி தேட வேண்டும். எவ்வளவு பலமான கோட்டையாயிருந்தாலும் இரகசியச் சுரங்கவழி இல்லாமற் போகாது. அதை எப்படி கண்டு பிடிப்பது? அது யாருக்குத் தெரிந்திருக்கும்? தெரிந்தவர்கள் யாரேனும் இருந்தாலும், தனக்குச் சொல்வார்களா?

இப்படிப் பலவகையாகச் சிந்தித்துக் கொண்டே நடந்த போது, சட்டென்று பழுவூர் இளையராணியின் நினைவு வந்தது. ஆகா! அந்தக் கோட்டைக்குள் யாராவது தனக்கு உதவி செய்வதாயிருந்தால், அந்த மாதரசிதான் செய்யக் கூடும்.

அதுவும் சந்தேகந்தான். ஆனால் ஆழ்வார்க்கடியானின் பெயரைச் சொல்லி ஏதேனும் தந்திர மந்திரம் செய்து பார்க்கலாம். அப்படிப் பார்ப்பதற்கு முதலில் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## உழைப்பே அதிர்ஷ்டம் தரும்

ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார்.

தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும்படிச் சொல்லிவிட்டு இறந்து போனார்.



பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை.

ஒருவேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லி விட்டாரோ என்ற எண்ணத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

'இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும்' என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறு படியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் 'சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்' என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள்.

நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல் அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை லாபம்.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

(முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கேடு வருமா என்று கேட்பது கோழைத்தனம். புகழ் வருமா என்று கேட்பது தற்பெருமை. ஆனால் மனச் சான்றோ, அறம்தானா என்றே கேட்கும்.
> – புன்ஷன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆதிசிவன் உடைப்பு வலியின் கனம் அறியுமினே!

வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதி லிங்கம் உடைத்தெறியப்பட்ட சம்பவத்தால் சைவ மக்கள் நொந்து போயுள்ளனர்.

ஆதிலிங்கத்தை உடைத்தெறிந்தமை இந்த நாட்டுக்குக் கேடு வரப்போவதற்கான அறிகுறியாக இருக்குமோ எனச் சைவ மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

தவிர, ஆனையிறவில் பிரதிஷ்டை செய்யப்பட்ட நடராஜர் சிலை தொடர்பில் முன்வைக்கப்பட்ட எதிர்விமர்சனங்களின் உள்ளார்ந்தம், சைவாலயங்களில் இருக்கக்கூடிய கடவுள் விக்கிரகங்களை உடைக்க வேண்டும் என்பதற்கான முன்னேற்பாடாக இருக்குமோ என்ற அடிப்படையிலும் சைவ அபிமானிகள் சிந்திக்கின்றனர்.

ஆனையிறவு தமிழர் பூமி. ஈழத் தமிழ் நிலத்தின் வரலாறு என்பது சைவத் தமிழ்க் குடிகளில் இருந்து தொடங்குகின்றது.

இந்த மண்ணின் ஆதிக்குடிகள் சைவத் தமிழர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்று உண்மை.

கால அசைவில் – அந்நியர்களின் வருகையால் நம் தமிழ் இனம் பெரும் அவலங்களை அனுபவித்தது.

ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தங்களின் சைவ சமய அடையாளங்களை, அனுட்டானங்களை கடைப்பிடிக்க முடியாத துன்பத்துக்கு ஆளாகினர்.

அந்த வேளையில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை மதமாற்றத்தோடு அந்நியர்கள் தொடுத்துவிட, கற்றல் நோக்கம் கருதி நம் தமிழ் உறவுகளில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறினர்.

இந்த மாற்றம் மனம் மெய் மொழிகளால் உடன்பட்டதன்று.

மாறாக வாழ்வதற்கு கல்வி அவசியம் என்ற அடிப்படையில் அந்த மதமாற்றம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாயினும் அவ்வாறு மதம் மாறியவர்கள் மனத்தால் தங்களின் தாய்ச் சமயமாகிய சைவ சமயத்தின் நெறி நின்று வாழ்ந்தனர்.

ஆம், ஒரு தாய் பிள்ளைகளாக இருந்தவர்களில் ஒருவர் கிறிஸ்தவத்துக்கு மதம் மாற, மற்றவர்கள் தங்களின் தாய்ச் சமயத்தில் இருந்தனரெனில்,

தாய் பிள்ளை உறவு இரு பக்கத்திலும் ஒன்றாக இருந்தது.

இருந்தும் நம் மண்ணில் வெளிநாட்டு சக்திகளால் மதமாற்றம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவும் அது கண்டு நாம் கவனமற்றவர்களாக இருந்ததாலும் எம் தாய்த் தமிழ் பெருந்துயர் அடைய வேண்டியதாயிற்று.

அந்தோ! வெடுக்குநாறிமலையில் ஆதிசிவன் உடைக்கப்பட்டதெனும்போது, அதன் வலி, சைவ மக்களை மட்டுமல்ல, தமிழ்த் தாயின் பிள்ளைகளான கிறிஸ்தவ மக்களையும் நிச்சயம் தாக்கி இருக்கும்.

ஏனெனில் நாங்கள் மதவழிபாட்டால் வேறுபட்டிருந்தாலும் எங்கள் ஆதிக்குடியான சைவத் தமிழ்த் தாயின் பிள்ளைகள் அல்லவா நாம்.

ஆகையால் ஆதிசிவன் உடைபட்டால், அது எங்களை நிச்சயம் அதிர வைக்கும் என்பது சத்தியம்.

# ஐ.எம்.எப் ஆலோசனைக்கு அமையவே எரிபொருள் சூத்திரம் அறிமுகம்

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஆலோசனைக்கு அமைய அமைச்சினால் எரிபொருள் விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என எரிசக்தி அமச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எதிர் காலத்திலும் அமைச்சு இந்த சூத்திரத்தை நடைமுறைப்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் (CPC) பெற்ற இலாபம் அல்லது நட்டத்துடன், எரிபொருளின் மீது விதிக்கப்படும் உண்மையான வரித் தொகை மற்றும் விலையை அதிகரிப்பது அல்லது குறைப்பது ஆகிய வற்றைக் கணக்கிடுவதற்கான ஒரு முறையாக புதிய சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த ஆட்சியில் அப்போதைய நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் வழிகாட்டலின் கீழ் எரிபொருள் விலை சூத்திரத்தை பகிரங்கமாக அறிவித்ததன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட முதலாவது சூத்திரம் இதுவாகும் என அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (ம-7,9)

# விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் விஞ்ஞான மாணி (Bachelor of Sciences) கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி சித்திரை 6 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர் தரத்தில் இணைந்த கணிதம், உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது மூன்றில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை மேலதிக விபரங்களுக்கு https://ou.ac.lk/nsc/ என்ற இணையத்தளத்திற்கு அல்லது யாழ் பிராந்திய நிலையத்தின் 021 222 3374 என்ற தொலைபேசியினூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-7,9)

# எரிபொருள் விலை குறைந்தாலும் பேக்கரி பொருட்களின் விலைகள் குறையாது

எரிபொருளின் விலை குறைந்துள்ள போதிலும், பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை இப்போது குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எரிபொருள் விலை அதிகரித்த போது பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை அல்லது குறைக்கப்படவில்லை எனவும், எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் எரிபொருள் விலைகள் மேலும் குறையும் பட்சத்தில், இறக்குமதி செய்யப்படும் முட்டைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாத நிலையில், புத்தாண்டு சமயத்தில் பாண், கேக் மற்றும் பிற பேக்கரி பொருட்களின் விலைகள் கண்டிப்பாக குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பேக்கரி பொருட்களின் விலையை குறைக்கும் வகையில் எரிபொருளின் விலை திருத்தம் செய்யப்படவில்லை எனவும் பேக்கரி தொழிலில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், எரிவாயு மற்றும் விறகுகள் பயன்படுத்தப்படுவதாகவும் ஜயவர்தன தெரிவித்தார். (ம-7,9)

# கல்வி இராஜாங்க அமைச்சர் வவுனியாவிற்கு திடீர் விஜயம்

கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு நேற்று திடீர் விஜயம்ஒன்றை மேற்கொண்டார்.

பாடசாலை மாணவர்கள் விளையாட்டு பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் பாடசாலையை வெளியுத்துறை சுற்றி பார்வையிட்டார். தொடர்ந்து பாடசாலையின் தேவைகள் தொடர்பாக அதிபர் ஆ.லோகேஸ்வரன் மற்றும் பிரதி அதிபர்களுடன் கலந்துரையாடியதுடன், அதிபர் அவர்களிடம் இருந்து பாடசாலையின் தேவைகள் பற்றிய மகஜரை பெற்றதோடு மாணவர்களுடனும் கலந்துரையாடியிருந்தார். (ம-7,9)

# 25 வருடங்களின் பின் இருவருக்கு மரண தண்டனை

(மட்டக்களப்பு)

ஈழவர் ஜனநாயக முன்னணிக்கட்சியின் (ஈரோஸ்) செயலாளர்நாயகம் பிரபாகரனின் 3 வயது பிள்ளை மற்றும் கட்சி உறுப்பினரை கொலை செய்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவருக்கு நேற்று மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லாஹ் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

1997ம் ஆண்டு மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் அமைந்திருந்த (ஈரோஸ்) கட்சிக் காரியாலயத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர், கட்சிஆதரவாளர் ஆகியோருக்கும் கட்சி செயலாளருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு காரணமாக கடந்த (1997.7.17) ம் திகதி கட்சி செயலாளர் மீதும் அவரது குடும்பத்தினர் கட்சி ஆதரவாளர் மீதும் தாக்குதல் நடாத்தினர்.

சம்பவத்தில் கட்சி செயலாளரின் 3 வயது பிள்ளையான கிறேமன் கிஷான் மற்றும் கட்சி உறுப்பினரான சந்திர குமார் உயிரிழந்ததுடன் பிரபாகரன் அவரது மனைவி மற்றும் கட்சி ஆதரவாளர்கள் இருவர் உட்பட 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தாக்குதலை மேற்கொண்ட முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் சமீல ரஜீந்தர, கட்சி ஆதரவாளரான விவேகமூர்த்தி ஆகிய இருவரையும்கைது செய்து பின்னர் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப் பட்டனர். அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள், மட்டக்களப்பு மேல்நீதி மன்றில் தொடர்ந்து கடந்த 25 வருடங்களாக இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை நேற்று எடுக்கப் பட்டபோது சந்தேக நபர்கள் இருவரும் மனித படுகொலை மற்றும்காயத்தை ஏற்படுத்தியமை போன்ற 6 குற்றச்சாட்டுக்களுக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (ம-7,9)

# தீவுப்பகுதியில் திருட்டை தடுப்பதற்கு மண்டைதீவில் சோதனை முகாம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் இடம்பெறுகின்ற திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக, மண்டைதீவில் உள்ள சோதனை முகாமினை பலப்படுத்தி தீவுப் பகுதியில் இருந்து வெளியேறும் வாகனங்களை பரிசோதன்ன செய்வதன் மூலம் தீவுப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த முடியும் என யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியில் மாடுகள் கடத்தல் மற்றும் ஏனைய திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட போது இந்த முடிவெடுக்கப்பட்டது. குறிப்பாக ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் கட்டாயமாக இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற வேண்டும் என் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பகுதியில் இருந்து படகுகள் மூலம் வேறு பகுதிகளுக்கு மாடு மற்றும்திருட்டப்படும் பொருட்கள் எடுத்துச் செல்லப் படுவதாக கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

திருட்டை தடுப்பதற்கு கடற்படையினர் ஒத்துழைக்க வேண்டும் என கோரப்பட்டது. (ம-7,9,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல் உற்சவம் நேற்று ஆரம்பமானது



(தரும்புரம்)

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் விழா விளக்கு வைப்புடன் நேற்று ஆரம்பமானது.

விசேட பூசை நிகழ்வுகள் நடைபெற்று பிரம்பு வழங்குதல் வைபவம் நடைபெற்றதைத் தொடர்ந்து நேற்று மாலை பாரம்பரிய முறையில் மாட்டுவண்டில்களில் பிரம்பு ஆலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பின் இன்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவடியைச் சென்றடைந்து விசேட பூசைகளும் நடைபெறும்.

மீண்டும் ஏப்ரல் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மடைப்பண்டம் புறப்பட்டு மறுநாள் 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணியளவில் ஆலயத்தை வந்தடையும். அன்றைய தினமே பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும்.(4-6-316)

# இணுவில் சிவகாமி அம்பாள் ஆலய வரலாற்றுப் பதிவு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இணுவில் சிவகாமி அம்பாள் ஆலய வரலாற்றுப் பதிவுகள் நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. க.ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி மற்றும் யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட முன்னாள் பீடாதிபதி கலாநிதி. சுகந்தினி சிறிமுரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ஆசியுரையினை சிவஸ்ரீகுமார சரவணபவக் குருக்களும் (ஜே.பி) அருளுரையை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மற்றும் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திரு முருகனும் மற்றும் நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் நிகழ்த்தவுள்ளனர். (4)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின் தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் நான்காவது கண்பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-6)

# மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்துகள்

## வடக்கு இ.போ.ச நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களை பேருந்தில் ஏற்றாமை சென்றமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் அவதானம் செலுத்தியிருந்த நிலையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு பிராந்திய முகாமையாளரால் மாகாணத்தில் இயங்கும் ஏனைய சாலை முகாமையாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பேருந்துகள் பாடசாலை மாணவர்களை ஏற்றாது சென்றமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

"பேருந்துகள் ஏற்றாமல் செல்வதனால் வீதியில் அந்தரிக்கும் மாணவர்கள்" என்னும் தலைப்பில் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் தனது சொந்த பிரேரணை அடிப்டையில் விசாரணைகளை ஆரம்பித்து இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பியிருந்நது.

அதற்கு இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளரினால் உரிய நடவடிக்கை எடுத்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா சாலை முகாமையாளர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் பிரதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் முடிவு நேரங்களில் செயலாற்றும் பேருந்துகள் பாடசாலை மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கி ஏற்றியிருக்குமாறு பேருந்து குழுவினருக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கும் இடத்து சம்பந்தப்பட்ட பேருந்து குழுவிற்கு எதிராக சபை விதிமுறைகளின் படி கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை போக்குவரத்துச் சபையால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (4)

# யோக சுவாமிகளது 59 ஆவது குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

யோக சுவாமிகளது 59 ஆவது குருபூசை தினம் நாளை மறுதினம் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள சிவ தொண்டன் நிலைய புராண மண்டபத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் மகேசுர பூசையும் இடம்பெறும்.

எனவே இந்நிகழ்வில் அடியவர்களை கலந்து கொள்ளுமாறு சிவ தொண்டன் சபையினர் அறிவித்துள்ளனர். (4)

## விவசாயிகளுக்கான இலவச உரம்

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பு விவசாயிகளுக்கான இலவச ரி.எஸ்.பி உரம் இன்று வியாழன் மற்றும் நாளை வெள்ளி ஆகிய இரு தினங்களில் கைதடி கமநல சேவை நிலையத்தில் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இதன்போது கடந்த வருடம் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு பரப்பு ஒன்றிற்கு 400 கிராம் என்ற அடிப்படையில் இலவச உரம் வழங்கி வைக்கப்படஇருப்பதாக தனங்கிளப்பு கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர். (4-6-30)



அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம பசுபதீஸ்வரர் கோயில் மஹா கும்பாபிஷேகம் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றது.

# வடமாகாணத்தில் சாதித்த 11 பெண்கள் கௌரவிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் மகளிருக்கான தினம் நேற்று யாழில் இடம்பெற்றது. ஒன்றிணைந்த செயற்பாடுகளினூடாக சமத்துவத்தை உறுதி செய்வதுடன் பெண்களின் வலுவூட்டலை மேம்படுத்தல் எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது வடமாகாணத்தில் சாதித்த 11 பெண்கள் கௌரவிக் கப்பட்டனர். இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவப்பீட பீடாதிபதி வைத்தியர் இ.சுரேந்திர குமார், சட்டத்தரணி மாதுரி நிரோசன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(4-6-33)

# யாழ்பாடி சதுரங்க சுற்றுப்போட்டி-2023

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் வருடந்தோறும் யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே [illegible] யாழ்பாடி சதுரங்கச் சுற்றுப் போட்டியானது எதிர்வரும் 11 மற்றும் 12 ஆகிய திகதிகளில் காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த போட்டியானது 6,8,10,12 ஆகிய வயதிற்குட்பட்டவர்களுக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் 14,16 வயதிற்குட்பட்டவர்களுக்கும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவங்களை தங்களது பாடசாலைகளில் அல்லது எமது செயலக முகநூல் பக்கத்தில் பெறுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் எதிர்வரும் 06.04.2023 இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என யாழ். பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து...

போதைய குறைந்தபட்ச பேருந்து கட்டணத்தை இன்று முதல் 34 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக குறைக்குமாறு பதில் போக்குவரத்து அமைச்சர் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எரிபொருள் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக பேருந்து கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்துக் கட்டண திருத்தம், அனைத்து தனியார் மற்றும் அரச பேருந்துகளுக்கும் பொருந்துமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## எரிபொருட்களின்...

தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாக நேற்று விசேட செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, 92 ஒக்டேன் பெற்றோல் 60 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளது. அதன்புதிய விலை 340 ரூபாயாகும்.

அத்துடன், 95 ஒக்டேன் பெற்றோல் விலை 135 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளது அதன் புதிய விலை 375 ரூபாயாகும்.

மேலும் ஒட்டோ டீசல் விலை 80 ரூபாயினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 325 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே சுப்பர் டீசல் விலை 45 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 465 ரூபாயாகும்.

மண்ணெண்ணெய் விலையும் 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, அதன் புதிய விலை 295 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## கோவில்கள்...

பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஆதீன குருமுதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் தலைமையில் குறித்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மேற்குறிப்பிட்ட அமைப்புக்களைச் சார்ந்த மூன்று பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சைவக் கோவில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் சைவமக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கவேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்ட அமைப்புக்களைச் சார்ந்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு நல்லை ஆதீன திருஞானசம்பந்தர் ஆதீனம்மற்றும் சைவ சமய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ம-7,9,33)

## வடமராட்சியில்...

வடமராட்சியில் தொழிலுக்கு செல்லும் அனைத்து படகுகளும் கடற்படையினரின் சோதனைச் சாவடியினை தாண்டியே செல்ல வேண்டும். அவ்வாறு செல்வதன் மூலம் சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுவோரை கைது செய்யக்கூடியதான சாத்தியக்கூறு காணப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தின்போதே கடற்றொழில் அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

வடமராட்சி பகுதியில் தற்போது தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி தொழில் செய்வதாக மீனவ சங்கப் பிரதிநிதிகள் குற்றம் சாட்டுகின்றார்கள். கடற்படையினர் அதனை கட்டுப்படுத்த தவறுகின்றார்கள் எனவும் குற்றம் சாட்டுகின்றார்கள். எனவே தொடர்ந்து மீனவப் பிரதிநிதிகள் பாதிப்படைவதனை இடமளிக்க முடியாது அதற்கு ஒரு தீர்வினை பெற்றுகொடுக்க வேண்டும்

இன்றிலிருந்து வடமராட்சியில் கடற்றொழிலுக்கு செல்லும் அனைத்து தொழிலாளர்களும் படகுகளும் கடற்படையின் சோதனைச் சாவடி ஊடாகவே செல்ல வேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறான நிலைதான் காணப்பட்டது.

பின்னர் கடற்படை தடுக்கின்றது என்ற பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டு எமது தலையீட்டால் நிறுத்தப்பட்டது.

எனினும் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதை தொடர்ந்து அனுமதிக்க முடியாது.

யார் கடலுக்கு செல்வதாக இருந்தாலும் கடற்படையின் சோதனை சாவடியின் ஊடாகவே தொழிலுக்கு செல்ல வேண்டும் கடற்படையின் அனுமதியுடன் மாத்திரமே செல்ல வேண்டும்.

எனவே தடை செய்யப்பட்ட சுருக்குவலை ஏனைய சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடுவோரை இதன்மூலம் கட்டுப்படுத்துவோம் என்றார். (ம-7,9,33)

## ஆர்ப்பாட்டத்துக்...

0778782184, நரேன்-0770021386, கீர்த்தனன் - 0760929717, அகிலேஸ் - 0779984024, மன்னகுளம் - பெரியகுளம் - கனகராயன்குளம் - விஞ்ஞானங்குளம் - சுதன் 0772802407, மிதுர்சன் - 0771294567, கஜானன் - 0766206854, திருகோணமலை - பிரசாத் - 0741426737, 0711200800, ஆசிகுளம் - செல்வநாயகம் - 0775300653, ஈச்சங்குளம் - மறவன்குளம் - தரணிக்குளம் - முகுந்தன் - 0768429722 (ம-7,9)

## வவுனியாவில்...

விக்கிரகங்கள் தொடர்பாக ஜனாதிபதியால் தீர்வொன்று வழங்கப்பட்டுள்ளது.

எனவே இன்று இடம்பெறவிருந்த போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது என்ற வகையில் பொய்யான பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரை உரிமை கோரியே குறித்த போலிப் பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும் குறித்த விடயத்தைமுற்றாக மறுத்துள்ள ஆலயத்தின் நிர்வாகத்தினர்இன்று திட்டமிட்டபடி ஆர்ப்பாட்டம்இடம் பெறும்என்று தெரிவித்துள்ளனர்.

இன்றைய ஆர்ப்பாட்ட பேரணி காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டு வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்றடையவுள்ளது.

எனவே பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சமயப் பெரியோர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் என அனைத்து தரப்புக்களும் பேதங்களை மறந்து குறித்த பேரணியில், கலந்து கொண்டு மத ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதற்கான கோரிக்கையினை வலுப்படுத்த ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,9,299)

## அதிர்ச்சியூட்டும்...

வித்தார்.

எட்டு மாத காலப்பகுதியில் மொத்தம் 6,728 நபர்கள் 'ஐஸ்' என அழைக்கப்படும் போதைப்பொருள் வைத்திருந்ததற்காக காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், நாட்டில் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஐஸ் ஆகியவற்றின் கணிசமான அளவு பயன்பாடு மற்றும் பரவல் காணப்படுகிறது. (ம-7,9)

## மின்சார கார்கள்...

என்ற வகையில், முடிந்தவரை எலெக்ட்ரிக் வாகனங்களை மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற முடிவில் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## கண்ணகை...

செல்ல வேண்டியுள்ள நிலையில், குறித்த ஆலயத்தை விடுவிக்குமாறு பலாலி கண்ணகை அம்மன் கோவில் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7,9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ENGLISH WEEKEND INDIVIDUAL CLASSES

- Grammars
- Spoken English
- IELTS Preparations

The class provides best Proficiency knowledge in English

(C-6255)

Call For Class : 077 027 1552


# தேயிலையின் விலை 200 ரூபாயால் குறைவு

(கொழும்பு) டொலரின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் ரூபாவின் பெறுமதி உயர்வினால் ஒரு கிலோ தேயிலைக்கான பெறுமதி 200 ரூபாவினால் குறைந்துள்ளதாக தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உலக சந்தையில் ஒரு கிலோ மலையக தேயிலை 1,250 ரூபாவிற்கு கிடைத்ததாகவும், தற்போது அது 1,050 ரூபாவாக குறைந்துள்ளதாகவும் தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-7,9)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதியில் 4 ¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு

021 221 5052
077 606 8834

(15074)

## IELTS வகுப்புக்கள்

- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்

6 புள்ளிகளுக்கு மேல் பெறாவிட்டால் செலுத்திய பணம் மீளளிக்கப்படும்.

10 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.

WINSTAR CONSULTANTS PVT LTD

45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

071 071 6979

(15073)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15083)

076 825 7716 (ஆகாஸ்)

## Vacancy

Data entry operator
Gender : Female
Age : 20 - 35
Salary : 20,000/= - 30,000/=
Expected : Tamil typing, Photoshop, Html, English
Experience : 2 years

076 362 2747

(15079)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6256)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## IELTS

Academic | General | UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 17)

நேரடி, zoom வகுப்புக்களாக

A1 IELTS Life Skills திருமணம் செய்து UK செல்வோருக்கானது

B1 Skilled Worker Visa மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

புதிய பிரிவு ஆரம்பம் 1/4/2023-SAT,3/4/2023-MON-9 am or 3 pm

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH

SPOKEN ENGLISH

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

(C-6248)

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

## பதவி வெற்றிடம்

- தமிழ் ரைப்பிங்/ பக்க வடிவமைப்பாளர் அனுபவமுள்ளவர்கள்/பயிலுநர்கள் (இருபாலாரும்)
- அலுவலகச் செய்தியாளர் (இருபாலாரும்)
- இயந்திர இயக்குநர்/பயிலுநர் (ஆண்கள்/ இரவுக் கடமை)

யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

076 097 3121

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6256)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்புக்காணி விற்பனைக்கு (மேட்டு நிலம்) (நிலப்பரப்பு)




- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற்வீதி) இருந்து 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை (300,000) மூன்று இலட்சம் மற்றும் (200,000) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 km தூரம்

(15042)

பார்வையிடும் நேரம் :
காலை 06 தொடக்கம்
மாலை 6 வரை

Owner & Director
T.KALAITHASAN (KARAN)

076 733 6047
076 333 6079
076 733 6093

Office No :
021 315 5900

## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 120 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15081)

077 814 7389, 077 986 5457

## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 30 பரப்பு காணி விற்பனைக்குண்டு

நிலப்பரப்பு

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை
  காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக.கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(15081)

தொடர்புகளுக்கு :- ஜெயம்

077 814 7389, 077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.